# அர்ஜென்டினா வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்திய பயணம், 2013 ஜூன் 15-18

அர்ஜென்டினா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஹெக்டர் மார்க்கோஸ் டைமர்மன், இந்தியாவில்2013 ஜூன் 15-18ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்தியா அர்ஜென்டினா கூட்டு ஆணைய கூட்டத்தில் அவர் கூட்டுத்தலைமை வகிக்கிறார். அவருடன் 20 உறுப்பினர்கள் கொண்ட மூத்த அதிகாரிகள் அர்ஜென்டினாவின் வெளிநாட்டு விவகாரத்துறை, பொருளாதாரம் மற்றும் அந்நிய வர்த்தகம் மற்றும் விவசாயத்துறை அமைச்சகங்களில் இருந்து பங்கேற்கிறார்கள்.

இந்த கூட்டு ஆணையக்கூட்டத்தின் போது 2013 ஜூன் 17ந்தேதி, இரு தரப்பினரும், இந்தியா அர்ஜென்டினா இடையேயான இருதரப்பு உறவுகள், அரசியல், பொருளாதாரம் மற்றும் வர்த்தக, விவசாய, அறிவியல் தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் கலாசார விவகாரங்கள் குறித்த அனைத்து அம்சங்கள் குறித்தும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றி திறனாய்வு செய்யப்படும். மேலும் இருதரப்பு ஒத்துழைப்பிற்கான மேலும் புதிய துறைகள் குறித்தும் ஆராயப்படும். இரு நாட்டுக்கும் பொதுவான விருப்பம் கொண்ட விவகாரங்களில் பிராந்திய முன்னேற்றம் மற்றும் சர்வதேச அளவிலான முன்னேற்றம் குறித்து கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படும்.

அர்ஜென்டினாவில் இருந்து இந்தியாவிற்கு கடந்தமுறை வெளியுறவுத்துறை அமைச்சர் மட்டத்திலான விஜயம் 2006ம் ஆண்டு நிகழ்ந்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் 2013 பிப்ரவரி மாதம் அர்ஜென்டினாவிற்கு விஜயம் செய்தார். அர்ஜென்டினா அதிபர் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் டி கிர்ச்னர் 2009ம் ஆண்டு அக்டோபரில் இந்தியா வந்தார்.

இந்தியாவும் அர்ஜென்டினாவும் இதமான மற்றும் நேசமான நட்புறவினை கொண்டாடி வருகிறது. ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற விழுமங்களின் அடிப்படையில் இந்த உறவு உள்ளது. பலதரப்பு விவகாரங்களில் இருநாடுகளுக்கும் இடையே நெருக்கமான புரிந்துணர்வு உள்ளது. அர்ஜென்டினா, ஜி-20 நாடுகளின் உறுப்பினர். தற்போது

ஐ.நா. பாதுகாப்புக்குழுவில் நிரந்தரமில்லா உறுப்பினர் பதவியை 2013-14ம் ஆண்டிற்கு வகித்து வருகிறது. இந்தியா அர்ஜென்டினா இடையேயான வர்த்தக விற்று முதல் 2012ம் ஆண்டு (ஜனவரி-டிசம்பர்) சுமார் 2பில்லியன் அமெரிக்க டாலர் அளவில் ஆகும்.

**புது தில்லி**
**ஜூன் 13, 2013**